REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 19௳ சனி (2—3—57) ★ ★ வெளியூர்: மாசி 20௳ ஞாயிறு (3—3—57) [இதழ் 227

காங்கிரசாட்சியின் அலட்சிய புத்தி

2,008 ஊழியர்கள் பாடம் கற்பித்தனர்

தென் பிராந்திய இரயில்வேயில் பணி புரியும் ஸ்டேஷன் மாஸ்டர்கள், உதவி ஸ்டேஷன் மாஸ்டர்கள் ஆகிய 2,919 பேர்களில் 2,008 பேர் கடந்த பிப்ரவரி 1-ந் தேதி முதல் 28 வரையுள்ள நாட்களில் முந்திய மாதச் சம்பளத்தை வாங்கிக்கொள்ள மறுத்து போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றனர்.

சர்க்கார் தங்கள் கோரிக்கைகளை நீண்டகாலமாக அலட்சியப்படுத்திவருவதைக் கண்டிக்கும் பொருட்டே அவர்கள் இந்த 'சம்பள மறுப்பு' இயக்கம் நடத்தினர் என்பது தெரிந்ததே!

'நீங்கள் என்னை அறிவீர்கள்; நான் உங்களை அறிவேன்'

'நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன்'

'ஊர்க்குருவியை ஒழிக்க இராம பாணமா?'

காந்தியார் வளர்த்த காங்கிரசின் பரிதாப நிலை பாரீர்!

காஞ்சித் தொகுதி வாக்காளர்களுக்கு அண்ணா உருக்கமான வேண்டுகோள்

"நீங்கள் என்னை அறிந்திருக்கிறீர்கள்; நான் உங்களை அறிந்திருக்கிறேன்.

"இங்கே வந்து என்னைப்பற்றிப் பேசும் மாற்றார் எல்லாம், நான் அரசியல் வாழ்வு தொடங்கிய பிறகு என்னை அறிந்தவர்கள்; நீங்களோ, நான் பிறந்து வளர்ந்து, பள்ளியில் பயின்ற நாள்முதல் என்னை அறிந்திருக்கிறீர்கள்.

"'தப்புச்செய்தான் கண்ணன்—வெண்ணெய் திருடினான்; 'குழந்தைதானே என்று எடுத்துக் கையை முத்தமிட்டேன்; ஆனால் அவனோ, என்னைக் கட்டிப் பிடித்துக் கன்னத்தில் முத்தமிடுகிறானடி, யசோதா' என்று கோபியர் கூறியபோதும், கண்ணனை வாரியெடுத்துக் கொண்டாள் யசோதை!

"அப்படிக் குற்றம் புரிந்த கண்ணனையே யசோதை ஒன்றும் செய்யாதபோது, ஒரு குற்றமும் புரியாத என்னை நீங்கள் ஆதரிக்காமலா விடுவீர்கள்?

"பேசுகிறவர்கள் எல்லாம் என்னைப் பற்றியே பேசுவதாகச் சொல்லி, தோழர்கள் மெத்த வருத்தப்படுகிறார்கள்; ஆனால் நான் அதற்காக வருந்தவில்லை.

"ஏனெனில், காங்கிரசின் சார்பில் பேசுகிற பெரியாரும் இதாரும், எதைப்பற்றிப் பேசுவார்கள்?

"காங்கிரஸ்காரனாயிருந்தால், காங்கிரசின் போராட்ட வரலாற்றைப் பேசி, சுதந்திரத்தின் சாதனைகள் என்று நீட்டி முழக்கி, ஒரு மணி நேரம் பேசலாம்.

"காங்கிரசை எதிர்ப்பவர்களானால், காங்கிரஸ் செய்யத் தவறியதையும் நாட்டு மக்களுக்கு இழைத்த நஷ்டங்களையும் பற்றிப் பேசலாம். ஆனால் திராவிட கழகத்தினர் எதைப்பற்றிப் பேசுவர்? காங்கிரசை ஆதரித்தா? முடியாதே! நேற்றுவரை காங்கிரசை எதிர்த்தவர்கள், நாளையும் எதிர்க்கப்போகிறவர்கள், காங்கிரசை எதிர்த்தாவது பேச முடியுமா? முடியவில்லை அவர்களால்! பின் எதைப்பற்றிப் பேசுவார்கள்? 'அடியேன்தானே மிச்சம்'—அதனால்தான் பேசுகிறார்கள், என்னைப்பற்றி!

"எப்படி புலி வேஷம் போட்டால் பரத நாட்டியம் ஆடமுடியாதோ, அதைப் போலத்தான்; என்னை எதிர்ப்பது என்று வேஷம் போட்டுக்கொண்டவர்கள் பேசுகிறார்கள். அதைப் பற்றி நாம் துளியும் கவலைப்படத் தேவை இல்லை.

"பெரியார்—நான் அவரிடம் 15 வருடங்கள் ஊழியம் புரிந்திருக்கிறேன்; அதற்காக-எனக்கு ஏதேனும் உதவி செய்ய வேண்டுமென எண்ணியிருந்தால் அதற்கு இதுதான் சந்தர்ப்பம். 'ஏதோ அண்ணாதுரை தேர்தலில் நிற்கிறான்; நம்மிடம் ஊழியம் புரிந்தவனாயிற்றே' என்று கருதி, எனக்கு அவர் உதவி செய்திருக்கலாம்; ஆனால் அவர், இந்தச் சந்தர்ப்பத்தையும் நழுவ விட்டுவிட்டார். அதனால், அவர்தான் எனக்குக் கடனாளியாகிறாரே தவிர, நான் அவருக்கு எந்தவகையிலும் கடனாளியாகவில்லை.

"ஊர்க்குருவியை ஒழிக்க 'இராம பாணம்' தேடுவதுபோல, இன்று நம்மை ஒழிக்கக் காங்கிரசார் பெரியாரை நாடியிருக்கிறார்கள். இது பெருமைக்குரியதல்லவா?

"காந்தியார் வளர்த்த காங்கிரஸ்—பாரெல்லாம் புகழும் பண்டிதரைத் தலைவராகக் கொண்ட காங்கிரஸ் நம்மை ஒழிக்க வலுவற்றுப் போய், நம்மை யார் தோளிலே தூக்கி வளர்த்தாரோ அந்தப் பெரியாரையும் அவரது தோழர்களையும் கூட்டிவந்திருக்கிறார்களே, இது நமக்குப் பெருமை அல்லவா?

"இங்கு நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன்; காட்ட வேண்டிய ஆதாரங்களைக் காட்டிவிட்டேன்; இங்கே தராத புள்ளி விவரம் இல்லை; எடுத்துரைக்காத நியாயங்கள் இல்லை; விளக்கப்படாத காரணங்கள் இல்லை; அப்பழுக்கற்ற தி. மு. கழக இலட்சியத்தையும் கொள்கைகளையும் நான் முடிந்தவரை விளக்கிவிட்டேன். இனி, நீங்கள்தான் தீர்ப்பளிக்கவேண்டும் — திங்களன்று!

"நீங்கள் இத்தனை நாளாய் காட்டிவரும் ஆதரவின் உருவம் 'உதயசூரியன்' பெட்டியில் விழும் ஓட்டுக்களில் தெரியவேண்டும்."

கரைபுரளும் மக்களின் ஆர்வம்

காஞ்சியின் எழிற்கோலம்—கண்கொள்ளாக் காட்சி!

மக்களிடை கலைவாணரின் வில்லுப் பாட்டு; நடிப்பு-இசைப் புலவரின் இன்னிசை

(நமது தனி நிருபர்)

காஞ்சி, மார்ச் 2—

பொதுவாக உலகினுடையவும் குறிப்பாக அகில இந்தியாவினுடையவும் கூரிய கண்கள் தன் பக்கம் திரும்பி, ஆவலோடு நிலைகுத்தி நிற்பதை காஞ்சீபுரம் சட்டசபைத் தொகுதி தனக்கு ஒரு பெரும் பெருமையாகக் கருதி, தன்னை பிரமாதமாக அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

இந்தத் தொகுதியில் தி. மு. க. அபேட்சகராக நமது அண்ணா அவர்கள் போட்டியிடுகிறார்கள் என்பதுதான் இந்த அலங்காரத்திற்குக் காரணம் என்பதைக் கூறத் தேவைஇல்லை.

வாக்குப் பதிவு நாள் மார்ச் 4-ந் தேதி நெருங்க, நெருங்க நகரத்தில் சிறப்பாகவும், தொகுதி முழுதும் பொதுவாகவும் மக்களிடை பெரும் உற்சாகமும் ஆர்வமும் பொங்கி நிற்கின்றன என்பதை, காஞ்சி நகரின் எழிற்கோலம் காட்டுகிறது.

எங்கு திரும்பினாலும் உதய சூரியன்! கழகக் கொடிகள்! தேர்தல் நோக்கம் கூறும் போஸ்டர்கள்! அரசியல் விளக்கம் தரும் கருத்துக்கள் கொண்ட தட்டிகள்! எல்லாம், கழகக் காளையரின் கைவண்ணம்தான்.

இத்தனைக்கும் மேலாக மக்கள், 'உதய சூரியனி'டத்தில் கொண்டுள்ள ஆர்வத்தையும் நம்பிக்கையையும் நாளுக்கு நாள் பெருக்கி வருகின்றனர்.

மாற்றார் எத்தனைதான் அண்ணாவை, தகாத வார்த்தைகளால் இழித்துரைத்தாலும் மக்கள் மட்டும் 'உதய சூரியன்' பக்கமே நிற்கின்றனர்.

சிறகுதான் இல்லை தோழர்களுக்கு—பறவை எனப் பறந்து, பணிபுரிய!

சுற்று வட்டாரங்களிலிருந்தும், சென்னையிலிருந்தும் தோழர்கள் காஞ்சீபுரம் சென்று, தேர்தல் வேலைகள் நடைபெறும் வகையையும் வண்ணத்தையும் கண்டு மகிழ்ந்துவருகின்றனர்.

நாளைய மறுதினம் வாக்குப் பதிவு! இன்று, அண்ணா அவர்களும், டாக்டர் சர். ஏ. இராமசாமி (முதலியார்) அவர்களும், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் தேர்தலுக்கு முன் கடைசி முறையாக கங்கைகொண்டான் மண்டபத் திடலில் மாபெரும் கூட்டம் ஒன்றில் பேசவிருக்கின்றனர்.

நேற்று காஞ்சி ரங்கசாமி குளத்தருகில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தம் குழுவினருடன் 'வில்லுப் பாட்டு' நிகழ்ச்சி ஒன்று நடத்தி, கூடியிருந்த சுமார் நாற்பதாயிரம் மக்களையும் 'உதயசூரியனு'க்கே வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், இரவு 9-15 மணியளவில், அங்கு நமது அண்ணா அவர்கள், தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் முழங்கினார்.

மாற்றார் செய்துவரும் பிரச்சாரத்திற்கு அண்ணா அவர்கள், தமக்கே உரித்தான பாணியில் சிறப்பான பதிலளித்து மக்களைக் கவர்ந்தார்கள்.

இரவு 11-30 மணிவரை நடைபெற்ற அந்தக் கூட்டத்தின் இறுதியில் நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் சிறிது நேரம் பேசிவிட்டு, 'உதய சூரியனுக்கு மக்கள் ஒட்டு' என்ற நிலையை உறுதி செய்யக்கோரி பாடல்கள் சில பாடி, கூடியிருந்தோரை மகிழ்வித்தார்.

தென்னாட்டில் குமுறும் புரட்சி 'எரிமலை'

வடநாட்டு இந்தி வெறியர்களுக்கு பிரகாசா 'எச்சரிக்கை!'

நாகபுரி, மார்ச் 1—

தென்னாட்டில் வட நாட்டிற்கு எதிராகப் புரட்சி எரிமலை குமுறிக்கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, சென்னையின் முன்னாள் கவர்னர் பிரகாசா வடநாட்டு இந்தி வெறியர்களுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

என்ன எச்சரிக்கை தெரியுமா?

இந்திப் பிரியர்கள், இந்தித் திணிப்புப் பற்றிப் பேசும் போது பாதுகாப்பான வாசகங்களை மிக எச்சரிக்கையாக உபயோகிக்க வேண்டுமாம்!

பிரகாசா, இந்திப் பிரசாரக் கூட்டம் ஒன்றில் இந்த எச்சரிக்கையைத் தந்திருக்கிறார்.

மேலும், வடநாடு தென்னாட்டின்மீது ஆதிக்கம் செலுத்துகிறது என்ற எண்ணமும் தென்னாட்டு மக்களிடை வலுப்பெற்று விளங்குகிறது என்றும் அந்த எண்ணத்தைப் போக்கும் வகையில் வடநாட்டவர் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தி மட்டும் தேசிய மொழி அல்ல என்றும், 14 மொழிகள் தேசிய மொழிகள் என்றும், இந்தி, அரசாங்க மொழி மட்டும்தான் என்றும் அவர் எடுத்துரைத்து, வடநாட்டவர் ஏதாவதொரு தென்னாட்டு மொழியையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் உபதேசம் செய்திருக்கிறார்.

இதன்மூலம் தென்னாட்டவரை இந்தி கற்கச் செய்துவிட முடியும் என்றும் அவர் கூறினாராம்!

சென்னையில் அண்ணா

நிகழ்ச்சிகள்

மார்ச் 4:

மாலை 6-30: தியாகராயநகர்
இரவு 7-15: மயிலை
,, 8-00: ஆயிரம்விளக்கு
,, 8-45: எழும்பூர்
,, 9-30; பெரம்பூர்
,, 10-15: வண்ணை
,, 11-00: பேசின் பிரிட்ஜ்

சென்னையில் எம்.ஜி.இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

★

மார்ச் 5:

மாலை 6-30: தியாகராயநகர்
இரவு 7-15: திருவல்லிக்கேணி
,, 8-00; ஆயிரம்விளக்கு
,, 8-45: எழும்பூர்
,, 9-30: பெரம்பூர்
,, 10-15: வண்ணை
,, 11-00: பேசின் பிரிட்ஜ்

ஈ. வெ. கி. சம்பத் டெலிபோன் எண்

ஈரோடில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களது இல்லத்தில் டெலிபோன் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

டெலிபோன் எண்: 288

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—3—57 சனி

அண்ணா வெல்க! வாழ்க!

அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு ஆட்சிப் பொறுப்பை எவரிடம் ஒப்படைப்பது என்பதைத் தீர்மானிப்பதற்குரிய வாய்ப்பாகத் தமிழ் மக்கள் இப்பொதுத் தேர்தலைப் பெற்று இருக்கின்றனர்.

கடந்த ஐந்தாண்டுக் கால காங்கிரசு ஆட்சியில், தாங்கள் பெறத்தவறிய தொழில் வளத்தை — வேலை பெறும் வாய்ப்பை — வாழ்வளிக்கும் வகையை எண்ணிப்பார்த்து, காங்கிரசு கட்சிக்குத் தீர்ப்பளிக்கும் அரிய வாய்ப்பாக, இந்தப் பொதுத்தேர்தல் அமைந்து இருக்கிறது.

இப்பொதுத் தேர்தலின் முதல் கட்டம் மார்ச்சு முதல் தேதி முடிவடைந்துவிட்டது.

நான்காந்தேதி இரண்டாவது கட்டம் காத்து இருக்கிறது.

நான்காந்தேதி நடைபெறப் போகும் தேர்தல் கட்டம், மிக மிக முக்கியமானது—தமிழ் நாட்டு மக்கள் அனைவரின் கருத்திலும் இடம்பெற்று இருப்பதுமாகும்.

அந்தத் தேர்தல் நாளை தமிழ் மக்கள் மட்டுமே எதிர்நோக்கி இருக்கின்றனர் என்பது முழு உண்மையல்ல. தேர்தலில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு அரசியல் கட்சியினரும் தனி நபர்கள் பலரும் அத்தேர்தல் நாளை—முடிவை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கின்றனர் என்பதுதான் முழு உண்மையாகும்.

காஞ்சிபுரம் தொகுதியில், பேராசிரியர் — பேரறிஞர் — பெரும் பண்பாளர்—நமது தோழர்களிலே பெருந்தோழர்-அண்ணா அவர்கள் போட்டியிடுகின்றார். அவரை காஞ்சிபுரம் மக்கள் மன மகிழ்ச்சியுடன் தேர்ந்தெடுப்பதற்காகக் குறிப்பிடப்பட்டிருக்கும் நாள் மார்ச்சு நான்கு. எனவேதான், அந்த நான்காந்தேதி தேர்தல் கட்டத்திற்குத் தனிச் சிறப்பு அளிக்கப்படுகிறது அனைவராலும்.

அண்ணாவின் தேர்தல் முடிவு அனைத்திந்தியாவிலும் எதிர்பார்க்கப்படுகிறது என்று—நாம் அல்ல—அரியலூர் புகழ் தில்லை அமைச்சர் அழகேசனார் அவர்களே, காஞ்சியில் நடைபெற்ற காங்கிரசுத் தேர்தல் கூட்டம் ஒன்றில் மனம் வெதும்பிக் குறிப்பிட்டுள்ளார் என்றால், அவரின் தேர்தல் முடிவை அறிய தமிழ்மக்கள் அனைவரும் ஆவலுடன் காத்து இருப்பதில் ஆச்சரியமில்லை.

அண்ணா, நம்மனைவரின் இதயத்தில் வீற்றிருப்பவர்—நமது அன்பிற்கு உரியவர்—கழகத்தைக் கட்டிக் காத்து வளம்படப் பேணி வருகின்றவர். அதன் விளைவாக, அவரது வெற்றி தோல்வி குறித்து நமக்குக் கவலை இருக்கிறது—நமது சிந்தையெல்லாம் நான்காந்தேதியை நாடி இருக்கிறது என்பதில் தனித்தன்மை எதுவுமில்லை. அது, மற்றக் கட்சியினரிடத்திலும் எதிர்பார்க்கக் கூடியதேயாகும் ; அது ஒரு பொதுத் தன்மையுமாகும்.

ஆனால், அண்ணாவின் தேர்தல் பற்றிய கவலை காங்கிரசுக் கட்சியினர் உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் அனைவருக்கும், எதிர்க்கட்சித் தலைவர் என்பதற்காக இருந்து தீரவேண்டிய அளவைவிட பலமடங்கு கூடுதலாக இருந்திடக் காரணம் என்ன?

அத்தகு பெருங்கவலை கொண்டிருக்கக்கூடிய அளவிற்கு—அரசியல் துறையில் மற்றவர்களால் செய்ய முடியாத அளவிற்கு அண்ணா என்ன புதுமையைச் செய்துவிட்டார்?

அவர் செய்திருப்பது மற்றக் கட்சியினரால் செய்ய முடியாத செயற்கரும் செயலா? அண்ணாவைப் போன்று படித்துப் பட்டம் பெற்றிருப்பவர் நாட்டிலே எவரும் இல்லையா?—ஏராளமானவர் உண்டு!

அவர்போன்று எழுத்துத் திறமை பெற்றிருப்பவர்கள் இல்லையா?— உண்டு — நிரம்ப உண்டு!

அவரையொத்துப் பேசக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள் இல்லையா?—உண்டு — அழகாகப் பேசுவதில் அவரையும் மிஞ்சக்கூடியவர்கள் உண்டு!

தமிழகத்தில் அதற்கெல்லாம் பஞ்சம் இல்லை. அதற்குப் பஞ்சம் என்றும் ஏற்படவும் ஏற்படாது தமிழகத்தில்!

பின் எதற்காக அண்ணாவின் தேர்தல் முடிவுபற்றிய கவலை, அரசியல் மாற்றுக் கட்சியினருக்கு இருக்க வேண்டியதற்கு அதிகமாக இருக்க வேண்டும்?

மாற்றுக் கட்சியினர் அனைவருமே அண்ணாவை கண்ணியக் குறைவாக ஏசுகின்றனர்—ஏளனமாகப் பேசுகின்றனர்—ஏழை-கோழை என்று எள்ளி நகையாடவும் செய்கின்றனர்!

தேர்தலுக்குத் துளியும் தொடர்புகொண்டில்லாத விவகாரங்களை எல்லாம் அநாகரிகமாகப் பொது மேடைக்கு இழுத்துவந்து, காரசாரமான வார்த்தைகளால் அண்ணாவைக் குறித்து அவர்கள் ஏசுவது எதற்கு? பேசுவதற்குக் காரணம் என்ன?

அந்தமாற்றுக் கட்சியினர், அண்ணாவை, சாமானியர் என்கின்றனர் — சாதாரணமானவர் என்கின்றனர் — வெளிப்படையாகப் பொது மேடைகளிலும் ஏடுகளிலும்! ஆனால், அதே நேரத்தில், சாமானியமானவர் ஒருவரின் தேர்தல் முடிவு குறித்துக் காட்டவேண்டிய கவலையைக்காட்டிலும் மிதமிஞ்சிய கவலையை, அண்ணா தேர்தல் முடிவில் காட்டுகின்றனர் இந்தக் கனவான்கள்!

அண்ணாவைக் குறித்து வெளிப்படையாகப் பேசிவரும் பேச்சிற்கும் அவர்கள் உள்ளங்களில் கொண்டிருக்கும் அச்சத்திற்கும் முரண்பாடு இருக்கிறது. ஏன் இந்த முரண்பாடு?

அண்ணாவைப் பாராட்டுவித்து அன்பு காணிக்கையாகத் தமிழ் மக்களுக்கு, விரும்பியோ விரும்பாமலோ அளித்த பெரியார் அவர்களுக்குக்கூட, அண்ணாவின் தேர்தல் முடிவு மண்டைக் குத்தலாகப் போய்விட்டிருக்கின்றதே, அது ஏன்?

பெரியார் உள்ளிட்ட மாற்றுக் கட்சியினர் அனைவருக்கும் அண்ணா ஒரு புதிர்! சுலபத்தில் விடை காணமுடியாத ஒரு பெரும் கேள்விக் குறி!

வெள்ளையர் அன்னியர்-அவர்களிடமிருந்து நாட்டை மீட்க வேண்டும்—இப்படிக் கூறி மக்களைத் திரட்டுவது சாத்தியமாயிற்று, காங்கிரசுத் தலைவர்களால்! துவக்கத்தில் விவரமறியா மக்களின் எதிர்ப்பும் ஏளனமும், அடிமை மோகிகளின் அதட்டலும் உருட்டலும் கடும் புயலென எழுந்தது என்றாலும், காலப்போக்கில் மக்களின் ஆதரவும் பாராட்டுதலும் காங்கிரசுத் தலைவர்களுக்குப் பெரும் பலமாக அமைந்தது.

அதுவுமன்றி, மக்களின் ஆதரவு நாளாக நாளாக காங்கிரசுக் கட்சிக்குத் திரண்டது போன்றே, ஆலை அரசுகளின் பண பலமும் காங்கிரசுக் கட்சியை மேலும் வலிவுள்ளதாக ஆக்க உதவியது.

உலக உத்தமர் காந்தியாரின் புனிதமான சேவையும் தியாக உணர்வும் காங்கிரசுக் கட்சியை மகோன்னத நிலைக்கு உயர்த்தியது. காங்கிரசின் இலட்சியமும் வெற்றி பெற்றது.

ஆனால், அண்ணாவின் இலட்சியம்—அரசியல் குறிக்கோள்—'நம்மவர்' என்ற சொல்லுக்குள்ள உண்மைப் பொருளை, தமிழ் மக்களுக்குத் தெளிவுபட உணர்த்தும் அல்லல் நிரம்பிய பொறுப்பான பணியாகும்; அதுவும் துவக்கப்பணி—பள்ளிச் சிறுவனுக்கு அரிச்சுவடி போதிப்பதுபோன்ற பணி.

அதில் அண்ணா வெற்றிபெற்றுள்ளாரா? — நிச்சயமாக வெற்றி பெற்றுள்ளார்.

எந்த நாட்டிலும், உலக வரலாற்றில் இதுவரை அவர் நிலையில் உள்ள எவரும் பெற்றிலாத அளவு, தனது அரசியல் குறிக்கோளை மக்களுக்கு உணர்த்துவதிலும் குறுகிய கால அளவில் மக்களைத் திரட்டுவதிலும், மகத்தான வெற்றி பெற்று இருக்கின்றார் அண்ணா—அவ்வெற்றியின் பேருருவம் தான் நமது முன்னேற்றக் கழகம்!

கையில் காலணா இல்லை—எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் கழகம் தோற்றுவிக்கப்பட்டது அண்ணாவால் — அருமைத் தம்பிமார்களின் துணைகொண்டு.

'அறிவகம்'—கழகத்தின் சொந்த சொத்தாகத் திகழ்கிறது.

சொந்தத் திடல்—கழகத்திற்குச் சொத்தாக்கப்பட்டு இருக்கிறது.

கட்சிக் கருத்தைத் தாங்கிவரும் 'நம் நாடு' இதழ் பெருத்த அளவில் இலாபமளிப்பதாக இல்லை என்றாலும், கழகத்தைக் காத்து வளர்த்துவரும் சொந்த ஏடாக மிளிர்கிறது.

அண்ணா ஏழை; பண பலம் அற்றவர்—அறவே இல்லாதவர்.

ஒரு ஏழையை நம்பி பணம் தரவும் பணிபுரியவும் தாமாக முன்வரவும் மக்களைத் தூண்டுவது என்பது எண்ணுவதற்கே பயங்கரமானதாகும்.

ஆனால், அண்ணா அதில் முழுவெற்றி பெற்று இருக்கின்றார். தமிழ் மக்களின் நம்பிக்கையைத் தட்டிப் பறித்துக்கொண்டும் இருக்கின்றார்.

எட்டாண்டும் முற்றுப் பெறாத கழகம், பணபலம் பெருத்தும் வயதிலும் மூத்தும் உள்ள காங்கிரசு கட்சியைப் பலப்பல இடங்களில் எதிர்த்து நிற்கிறது. எதிர்ப்பைத் தாங்க முடியாமல்காங்கிரசு, ஒவ்வொரு தொகுதியிலும் திக்குமுக்காடுகிறது.

இப்புதுமையை, தமிழ் மக்களின் பேராதரவுடன் செய்து காட்டி இருப்பவர் அண்ணா தான் என்றால், அதை மறுப்பவர் எவரும் இருக்கமுடியாது.

எந்த ஒன்று அண்ணாவின் அறிவாற்றலுக்கும் பண்பாட்டிற்கும் சிறப்பூட்டுவதாக இருக்கின்றதோ, அதுவேதான் மாற்றுக் கருத்தினரின் நேர்மையற்ற பகைக்கும் வசவுக்கும் மூலகாரணமாக இருந்துவருகிறது.

காஞ்சிபுரம் மக்கள், இந்த அரசியல் உண்மையை நன்கு தெரிந்திருப்பவர்கள். அண்ணாவை தேர்தலில் வெற்றி பெறச் செய்வதின் மூலம், தமிழ் நாட்டு வரலாற்றில் தங்களுக்கு உரித்தான புகழ் இடத்தைத் தேடிக்கொள்ள அவர்கள் துடிதுடித்துக்கிடக்கின்றனர் என்பதை நாம் அறிவோம்.

அண்ணாவின் வெற்றி, காஞ்சீபுரம் மக்களின் வெற்றி. அப்பகுதி மக்கள் அறிவர் இப்பேருண்மையை. அண்ணா வெல்க! வாழ்க!

புரட்சி நடிகரின் புயல்வேகச் சுற்றுப்பயணம்

பல்லாயிரக் கணக்கான மக்களிடை தேர்தல் முழக்கம்

தி. மு. கழக வெற்றியைப் பொறுத்தே நாட்டின் எதிர்காலம் இருக்கும்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாகத் தமிழ் நாடெங்கும் மின்னல்வேகத்தில் சுற்றுப்பயணம் செய்து கழகத்தின் கொள்கைக் கோட்பாடுகளை விளக்கியும், கழக அபேட்சகர்களுக்கும் ஆதரவு பெற்றேருக்கும் பொதுமக்கள் ஆதரவுதந்து தேர்தலில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் சென்ற இடமெல்லாம் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்வமும் உற்சாகமும் ததும்பக் கூடிநின்று கழகக் கொள்கை விளக்கம் கேட்டனர்.

வழி நெடுக கட்டுக்கடங்கா எண்ணிக்கையில் பொதுமக்கள் கூடிநின்று அவர்களை வரவேற்று மலர் மாலைகள் சூட்டி உபசரித்தனர்.

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களும் மற்றும் தோழர்களும் கலந்துகொண்டு பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 25—2—57 வரை அவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

வழுதாவூர் கிராமம்

19—2—57 காலை 9½ மணிக்கு, இக்கிராமத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களடங்கிய தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர் அ. பொன்னம்பலனார், என். எஸ். நாராயணன் ஆகியோர் பேசின பின்னர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தேர்தலில் மக்கள் கடமை குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

விழுப்புரம்

அன்று காலை 10 மணிக்கு விழுப்புரத்திற்கு அருகிலுள்ள சித்தலம்பட்டி, திருக்கனூர் பொதுக்கூட்டங்களில் தோழர்கள் கலந்துவிட்டு, பகல் 11-மணிக்கு விழுப்புரம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தோழர் எ. கோவிந்தசாமி தலைமை வகித்தார். கூட்டத் தலைவர் அவர்களிடம் தேர்தல் நிதி தரப்பட்டது.

வளவனூர்

பகல் 12½ மணிக்கு வளவனூரில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் தேர்தலில் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரிக்கும்படியும், காங்கிரஸ் ஆட்சியில் விளைந்த கொடுமைகளை விளக்கியும் பேசினர்.

ஆடுதுறை, மாயவரம்

மாலை 4½ மணிக்கு ஆடுதுறை பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர், மாலை 5-மணிக்கு, மாயவரம் சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தோழர் சி. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். தோழர்கள் என். எஸ். நாராயணன், அ. பொன்னம்பலனார், பி. வெங்கிட கிருஷ்ணன், கே. பிச்சை ஆகியோர் பேசினபின் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அரியதோர் சிறப்புரையாற்றினர். கூட்ட வசூல் தொகை, தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கு அளிக்கப்பட்டது.

பொறையாறு :

மாலை 6-30 மணிக்கு, தோழர் சி. ஜம்பு தலைமையில் நடைபெற்ற தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டத்தில் தோழர்கள் பி. வேலாயுதம், அ. பொன்னம்பலனார், என். எஸ். நாராயணன் ஆகியோர் பேசின பின் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் கழகத் தோழர்களை ஆதரிக்குமாறு கேட்டுக்கொண்டு உரையாற்றினர்.

நாகூர் :

இரவு 8-30 மணிக்கு, நாகூரில் தோழர் நா. மாரியப்பன் தலைமையில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், கி. மனோகரன், இரத்தினவேலு, என். எஸ். நாராயணன், அ. பொன்னம்பலனார், நாகூர்-அனீபா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நாகப்பட்டினம் :

இரவு 10 மணிக்கு, நாகை நகரில் பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். தோழர் என். ஆர். கணபதி தலைமை வகித்தார். தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், கி. மனோகரன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் தி. மு. கழகத் தேர்தல் பற்றிய விளக்கவுரையாற்றினர். கூட்டம் முடிவுற்ற பின்னர் கும்பகோணம் புறப்பட்டனர்.

குடந்தை :

இரவு 12-30 மணிக்கு, கும்பகோணம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார். மாலை 6 மணிக்கே கூட்டத்தில் குழுமியிருந்த மக்கள் அனைவரும் கட்டுக்குலையாமல் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் வரும்வரையில்

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★

சர்வாதிகார வெறியைத் தணிக்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் நிதி தாரீர்!

★

வரவு	ரூ.	அ.	பை
1—3—57 இதழ்ப்படி	...69,372	1	4
தஞ்சை-தேவூர் சோழமணி-c/o சுப்புலட்சுமி ...	11	0	0
மலேயா சோ. கடற்கரை ...	92	12	0
சேத்துப்பட்டுத் தோழர்கள்—அன்புச்சுடர் மூலம் ...	73	9	0
கோவை-மூடிஸ் பி. ஆர். காசிமுத்து ...	27	0	0
சென்னை-23, சோலைத் தெரு கோ. குணசீலன் ...	10	0	0
பொன்னேரி-கும்மிடிபூண்டி தி. மு. கழகம்— ஏ. இராதாகிருஷ்ணன் மூலம் ...	9	0	0
தாராவி தி. மு. கழகம் ...	706	8	0
லால்பாக் சுப்பிரமணியம் ...	32	2	0
பம்பாய்-கோரேகான் தி. மு. கழகம் ...	39	8	0
„ கம்பாலா ஹில் „ ...	115	0	0
„ அந்தேரி „ ...	170	0	0
„ மதுங்கா „ ...	250	0	0
புதுவை-அரியநகர் வ. பாவாடைராசு ...	18	0	0
பெங்களூர் ரா. செல்வராசன் ...	14	8	0
சிங்கப்பூர் கே. ஆர். பெரியசாமி ...	167	0	0
சிங்கப்பூர் நகர தி. மு. கழகம்—தஞ்சம்பஜார் அரு. செகநாதன் மூலம் ...	100	0	0
இலங்கை தம்மோதர் சித. கருப்பையா ...	25	0	0
தஞ்சை-வாலபுத்தூர் ஜி. கலைதாசன் ...	1	0	0
„ மூவாலூர் கரிகாலன் ...	1	0	0
„ ந. வ. குடிக்காடு தி. மு. கழகம்— ம. வச்சிரபதி மூலம் ...	24	8	0
மலேயா தி. பொன்னுசாமி ...	100	0	0
சிங்கப்பூர் கே. இலக்குமணன் ...	110	0	0
சென்னை 37-வது வட்டம் அண்ணா நாடக மன்றம்—கோ. இளவரசு மூலம் ...	4	0	0
சேலம்-அரூர் எச். எல். முருகேசன் ...	50	0	0
கட்டாக்-ஒரியா பசார் எஸ். ஏ. பாரி பிரதர்ஸ் ...	2	0	0
நெல்லை-நாங்குனேரி மு. வயலூர் குமரன் விற்பனை வரி அலுவலகம் ...	1	8	0
தெ. ஆற்காடு-மீனம்பூர் பார்த்தசாரதி ...	5	0	0
புதுவை-லாசுப்பேட்டை தி. மு. கழகம் வி. சுப்புரத்தினம் மூலம் ...	13	0	0
காரைக்குடி-நோம்புப்பொட்டல் இரா. செயபாலன் ...	120	0	0
மலாக்கா அன்பர்கள்—எம். ஆறுமுகம் மூலம் ...	69	9	0
மலேயா நா. ப. தி. செல்வன் (80 ஷில்லிங்) ...	53	0	0
மலேயா-கிள்ளாங் எம். இராமசாமி ...	225	0	0
சிங்கப்பூர் எஸ். தனப்பால், ஏ. அம்மைநாதன் ...	150	0	0
இலங்கை-யாழ்ப்பாணக் கிளை—தி. மு. கழகம் எஸ். ஆறுமுகம் மூலம் ...	100	0	0
ஆமதாபாத் கே. வி. கே. சாமி நாடக மன்றம் ...	225	5	0
பெரம்பூர்-இரயில்வே தொழிலாளர்— கே. ஜி. சுந்தரமூர்த்தி மூலம் ...	7	0	0
செங்கற்பட்டு-உத்திரமேரூர் தி. மு. கழகம்— என். எஸ். மணி மூலம் ...	41	0	0
சிங்கப்பூர்-ரயல் எம். திரவியன் ...	25	0	0
கோயம்புத்தூர் என். எச். ரோடு, கே. ஏ. அப்துல்காதர் ...	1	0	0
சிங்கப்பூர்-மலேயா எம். வி. கோவிந்தசாமி ...	60	0	0
அருப்புக்கோட்டை-இராமநாய்க்கன்பட்டி தி. மு. கழகம் ...	20	0	0
ஆலந்தூர் அ. வே. ரா. கிருட்டிணன் ...	1	0	0
பழனி தி. மு. கழகம் ...	500	0	4
உடுமலைப்பேட்டை அண்ணா நாடகத்தில் ஜோசேப் ஆரந்தம் ...	3	11	3
„ நாடகத்தில் கருப்பண்ணன் ...	7	13	3
குமாரமங்கலம் தி. மு. கழகம் ...	20	0	0
கனியூர்-உடுமலை—அண்ணா நாடக வசூல் மூலம்	...5,000	0	0
மதுரையில் அண்ணா நாடக வசூல் மூலம்	...5,500	0	0
இணங்கனூர் திருமணத்தில் ...	5	0	0
„ பொதுக்கூட்டத்தில் ...	11	0	0
அரவக்குறிச்சி தி. மு. கழகம் ...	501	0	0
திருச்சியில் அண்ணா நாடக வசூல் மூலம்	...2,500	0	0
லால்குடி. தி. மு. கழகம்—பொதுக்கூட்டம் மூலம் ...	300	0	0
சேலத்தில் அண்ணா நாடக வசூல் மூலம்	...3,600	0	0
போளூர்—நாடக வசூல் மூலம்	...1,001	0	0
எழுவாம்பாடி தி. மு. கழகம் ...	25	0	0
ஆம்பூர்-சேவூர் தி. மு. கழகம் ...	31	10	6
துரிஞ்சாபுரம் (வ. ஆற்காடு) தி. மு. கழகம் ...	31	0	0
சென்னை-மகளிர் மன்றம்	...1,330	0	0

ஆக மொத்தம் ரூ. **93,010-1-8**

விமான விபத்திலிருந்து

நேரு தப்பினர்

விமானிக்கு ரூ. 1-இலட்சம் அன்பளிப்புத் தரப்படும்

கடந்த பிப்ரவரி 26-ந் தேதி யன்று பண்டித நேரு அவர்கள், ஏற்படவிருந்த பயங்கரமான விமான விபத்து ஒன்றிலிருந்து விமானியின் சாதுரியமான நடவடிக்கையால் உயிர் தப்பினர்.

அவர் சென்று கொண்டிருந்த 'மேக தூதன்' என்ற இரஷ்ய இல்லூஷியன் விமானத்தின் ஒரு எஞ்சின் தீப்பிடித்துக்கொண்டது; உடனே தீ அணைக்கப்பட்டது; என்றாலும், விமானி செய்ப்பூர் அருகில் உபயோகிக்கப் படாமல் இருந்த விமான நிலையம் ஒன்றில் விமானத்தை இறக்கி விட்டார்.

பின்னர், வேறு விமானம் ஒன்றின் மூலம் செய்ப்பூர் சேர்ந்தார். அவர் கோளாவில் தேர்தல் பிரச்சாரம் செய்துவிட்டு, மங்களூரிலிருந்து இந்த விமானம்மூலம் சென்றுகொண்டிருந்தார்.

பரிசு

பயங்கரமான விபத்து நேரிட்டு விடாமல் சமயோசிதப் புத்தியுடன் விமானத்தை ஒரு நிலையத்தில் இறக்கி, நேருவை நாட்டுக்குத் தந்த விமானிக்கு ரூ. 1-இலட்சம் பரிசு தருவதென முடிவு செய்திருக்கிறார்கள்.

இதற்கு ஆந்திர சுகாதார இலாகா மந்திரி நவாப் மெஹ்தி நவாஜ்ஜங், தம்முடைய பங்காக ரூ. 500 அனுப்பியுள்ளார் என்று தெரிகிறது.

நினைத்ததும், நடந்ததும்!

ஜோகன்ஸ்பர்க், பிப். 28—

இங்கு பஸ் கட்டணத்தை 4 பென்சிலிருந்து 5 பென்சாக உயர்த்தப்பட்டதைக் கண்டித்துப் பொதுமக்கள் கடந்த 8 வாரங்களாக பஸ்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்; இதனால் பஸ் கம்பெனிக்கு 70,000 பவுன் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டிருக்கிறதாம். இந்த நிலைமை மேலும் நீடிக்குமானால், பஸ் போக்குவரத்தை அடியோடு நிறுத்த வேண்டிய கட்டம் ஏற்படக்கூடுமாம்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் அரசியல் தத்துவம்!

'உதய சூரியன்' சின்னத்தைக் கேலி செய்யும் விசித்திரப் போக்கு

திராவிட முன்னேற்றக் கழகம் இதுகாறும் நாட்டு மக்கள் மத்தியில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கும், அவர்களிடையே எழுப்பியுள்ள கேள்விகளுக்கும் சரியான பதிலோ விளக்கமோ தரமுடியாமல் வாய்க்கு வந்தபடி பேசி, கழகத் தோழர்களையும் தலைவர்களையும் தனிப்பட்ட முறையில் தூற்றியும் இழித்தும் பேசி வருவதையே தங்கள் முக்கியப் பணியாகக் கருதிவந்த காங்கிரஸ் பெருந்தலைவர்கள், இப்போது நம்முடைய சின்னத்தைக் கேலி செய்வதாகக் கருதிக்கொண்டு வாய்க்கு வந்தபடி உளறிக்கொட்டுகிறார்களாம்!

தேர்தலுக்கான சின்னங்களையெல்லாம் எந்தக் கட்சிகளினுடைய ஆலோசனைகளையோ திருத்தங்களையோ கோராமல் மத்திய சர்க்கார் தன்னிச்சையாகக் குறித்து அவைகளின் படங்களையும் வரைந்து கொடுத்திருக்கிறது.

அப்படித் தந்த சின்னங்களுள் ஒன்றுதான் 'உதய சூரியன்' சின்னமும்! அந்தச் சின்னத்தின் படத்தில், மலைகளுக்கிடையில் சூரியன் உதயமாவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

கழகத் தோழர்களைத் தனிப்பட்ட முறையில் இழித்தும் பழித்தும் இதுகாறும் பேசிவந்த காங்கிரஸ் தலைவர்கள் — குறிப்பாகத் தென்சென்னை பாராளு மன்றத் தொகுதியில் நமது அபேட்சகர் தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களை எதிர்த்துப் போட்டியிடும் மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இப்போது இந்தச் சின்னத்தைத் தூற்ற ஆரம்பித்துவிட்டிருக்கிறார்!

"இவர்கள் உதயசூரியனைத் தேர்தல் சின்னமாகக் கொண்டிருக்கிறார்களே; உதயசூரியனைக்குப் பின்னால் அவர்களுடைய படத்தில் மலையைக் காட்டியிருக்கிறார்கள்; கதிரவன் உதிக்கும் கிழக்கில் கடல் தானே இருக்கும்; இவர்கள் மலையை எங்கிருந்து கண்டு பிடித்துவிட்டார்கள்?" என்று ஒரு அதி அற்புதமான கேள்வியை எழுப்பி, ஏதோ கழகத்தவரை இதற்குப் பதில் கூற முடியாதபடி திக்குமுக்காடித் திணறடித்துவிட்டதாகக் கருதிக்கொண்டு பேசினாராம், அந்த 'நிதி' அமைச்சர் சென்னைக் கூட்டம் ஒன்றில்!

அமைச்சரின் 'அதிஅற்புத' வாதத்தில் பொதிந்து கிடக்கிற அற்புதம் ஒரு புறமிருக்க, இந்தத் தேர்தல் சின்னத்தை உருவாக்கினவர்களே தனது வடநாட்டு எஜமானர்கள்தான் என்பதையும் மறந்துவிட்டு கேலி பேசியிருக்கிறார் என்பது தான் இங்கு கருதத்தக்கது!

1,345மாணவர்கள் பட்டதாரிகளாயினர்!

சென்னை, பிப். 28—

நேற்று சென்னை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிற்கு டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் தலைமை தாங்கியிருக்கிறார்.

172 பெண்கள் உட்பட 1,445 பேர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

மேலும் 330 பெண்கள் உட்பட, 2,136 பேர் பட்டமளிப்பு விழாவிற்கு வரவில்லை; அவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

'ஏக இந்தியாக்'கள் ஆட்சியின் லட்சணம்!

புதுடில்லி, பிப். 28—

கடந்த பத்து ஆண்டு காலமாக நாட்டை ஆண்டுவரும் காங்கிரஸ், கல்வி கற்று வேலையில்லாதோருக்கு வேலைத் தேடித்தரும் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாம். 'குமஸ்தாக்கள்' தவிர மற்றத் துறைகளில் இவர்கள் வேலை பெறுவதற்கு உதவி யளிக்கப்பட்டுள்ளதாம்.

இதற்காக உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களில் மூன்று, வடநாட்டிற்குப் பயன்தருகிறது; டில்லி, மேற்கு வங்காளம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 250 பேர்களுக்கு இத்துறையில் பயிற்சியளிக்கப்படுமாம்.

தென்னாட்டில் கேரளத்தில் மட்டும் ஒரு நிலையம் அமைத்து 250 பேர்களுக்கு பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

தொழில் நுட்பப் பயிற்சித் திட்டம்

சென்னைக்குக் கிடைத்த இடம்!

தோல் பைகள், கைக்கடியாரவார்ப்பட்டைகள் போன்ற சாமான்கள் தயாரிப்பதற்கு 25 பேர்களுக்கு ஓராண்டுக் காலம் பயிற்சியளிக்க ஓர் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் பல்லாவரத்தில் அமைக்கப்படுமாம்.

ரூ. 30,000 கடனாகவும், ரூ. 10,900 மானியமாகவும் மத்திய அரசு தந்திருக்கிறதாம்.

சலவைத் தொழிலாளர்களுக்கு

சேலம் நகரச் சங்க செயலாளர் வேண்டுகோள்

"தமிழ் நாடு சலவையாளர் மத்திய சங்கச் செயலாளர் ஆர். சின்னுசாமி அவர்கள், 15—2—57 'சலவை மணி' இதழில் தேர்தல் சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் அறிக்கையில், சலவையாளர்களுக்கு இலவசக் கல்விச் சலுகையை காங்கிரஸ் அளித்ததென்றும், எனவே சலவையாளர்கள் அனைவரும் தமிழ்நாட்டில் காங்கிரசுக்கே ஓட்டளிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார். மேலும் அவர், அவ்வறிக்கையில், வேறெந்தக் கட்சியும் சலவையாளர்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்ததில்லை என்றும், மற்றக் கட்சிகளைக் குறைகூறியும் வெளியிட்டிருப்பதையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

"7—9—51-ல் தமிழ்நாடு சலவையாளர் மத்திய சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் பொதுத் தேர்தல் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க தமிழ் நாட்டிலுள்ள சலவையாளர் அனைவரும் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 'பொதுத் தேர்தலில் சலவையாளர் வாக்காளர்கள் போது யார் ஏழை எளியவர்களுக்கும் நம்போன்ற தொழிலாளர்களுக்கும் நாணயமாகவும் திறமையாகவும் வேலை செய்வார்கள் என்று தோன்றுகிறதோ, அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருப்பினும் அவரை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது' என்பதே அத்தீர்மானம்.

"இத்தீர்மானத்தை சலவையாளர் மத்திய சங்கக் கமிட்டி நிறைவேற்றியிருக்கும்போது, மத்திய சங்கச் செயலாளர் தனிப்பட்ட முறையில் வெளியிட்டிருக்கும் அறிக்கைக்கு சலவையாளர் யாரும் மதிப்பளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"மத்திய சங்கத்தைத் திறம்பட நடத்திச்செல்ல வேண்டிய அவர், இம்மாதிரி தேர்தல் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் கட்சியை ஆதரித்தும் மற்ற எதிர்க் கட்சிகளைக் குறைகூறியும் வெளியிட்டிருக்கும் அறிக்கையையும் அவரது செய்கையையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்."

இவ்வாறு, சேலம் நகரச் சலவையாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். சி. இராசு அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

இறுதி காலத்தில் இந்தத் திட்டமா?

சென்னை, பிப். 28—

கூட்டுறவு சங்கங்கள் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுமார் ரூ. 3¼ இலட்சம் செலவில் 475 வீடுகள் கட்டித்தரும் திட்டத்திற்கு சென்னை சர்க்கார் அனுமதியளித்திருக்கிறதாம்.

★★★★★★★★★★★★★★★

அதிகாரங்களைப் பரவலாக்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★

அடக்குமுறைச் சட்டங்களைத் தகர்க்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★

★★★★★★★★★★★★★★★

அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★

தேர்தல் ஊர்வலங்கள்

சேப்பாக்கம்

3—3—57 மாலை 4 மணிக்கு, சென்னை - சேப்பாக்கம் அருணாசல ஆச்சாரி தெருவிலிருந்து, தி. மு. கழக அபேட்சகர் தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களை ஆதரித்து மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு திருவல்லிக்கேணி தொகுதி முக்கிய வீதிகள் வழியாகச் செல்லும்.

கீழ்ப்பாக்கம்

3—3—57 காலை 7 மணிக்கு, சென்னை - கீழ்ப்பாக்கம் 'உமா' தியேட்டரிலிருந்து, ஆயிரம்விளக்குத் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களை ஆதரித்து சைக்கிள் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு கீழ்ப்பாக்கம், சேத்துப்பட்டு, நுங்கம்பாக்கம், ஆயிரம் விளக்கு ஆகிய இடங்களுக்குச் செல்லும்.

இராயப்பேட்டை:

3-3-57 காலை 8 மணிக்கு சென்னை — இராயப்பேட்டை 37-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையிலிருந்து கழக அபேட்சகர்கள் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரை ஆதரித்து ஓர் சைக்கிள் ஊர்வலம் புறப்படும். கழகத் தோழர்கள், சார்புடைய மன்றங்கள், படிப்பகங்கள் உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சென்னை—வண்ணை:

3—3—57 பிற்பகல், 1 மணியளவில், சென்னை—வண்ணை எம். சி. ரோடு தி. மு. கழகத் தேர்தல் மத்திய அலுவலகத்திலிருந்து, கழக அபேட்சகர் என். சிவரத்தினம் அவர்களை ஆதரித்து பெண்கள் அணிவகுப்பு ஊர்வலம் தோழியர்கள் ஜெகஜ்ஜோதி-நாகராசன், திரிபுரசுந்தரி-வீரமணி, பேபி அம்மாள்-இராசகோபால், காந்திமதி-முத்துசாமி, கே. இராசம் ஆகியோர் தலைமையில் புறப்பட்டு, 1, 2, 3, 4 ஆகிய நான்கு வட்டங்களின் முக்கிய வீதிகளில் செல்லும். கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் தத்தம் குடும்பங்களுடன் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை—புரசைவாக்கம்

3-3-57 காலை 8 மணிக்கு சென்னை எழும்பூர் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் க. அன்பழகன் அவர்களை ஆதரித்து புரசை, வேளாளர் தெரு எண் 10 இல்லத்திலிருந்து சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு வேப்பேரி, பெரியமெட், பார்க்டவுன், சேப்பியர் பார்க், சிந்தாதிரிப்பேட்டை, கோமளீசுவரன் பேட்டை, எழும்பூர் ஆகிய பகுதிகளில் நடைபெறும். தொகுதியிலுள்ள கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவைகளைச் சேர்ந்த தோழர்களனைவரும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை-16-வது வட்டம்

3—3—57 காலை 9 மணிக்கு, சென்னை—யானைகவுனி அந்த்த ஆதிப்பராய்க்கன் தெரு தேர்தல் அலுவலகத்திலிருந்து தி. மு. கழக அபேட்சகர் என். வி. நடராசன் அவர்களை ஆதரித்து தோழர் சி. பஞ்சாட்சரம் அவர்கள் தலைமையில் ஊர்வலம் ஒன்று நாதசுரம், பேண்டு வாத்தியங்கள் முழங்க புறப்படும். ஊர்வலத்தில் என். வி. நடராசன் அவர்களும், மற்றப் பிரமுகர்களும் கலந்துகொள்வர்.

சென்னை-பேசின்பிரிட்ஜ்:

3—3—57 காலை 7 மணிக்கு, சென்னை — பேசின்பிரிட்ஜ் தொகுதி முழுமையில், பெத்துநாய்க்கன்பேட்டை திருப்பள்ளித் தெரு மக்கள் மன்றத்திலிருந்து தோழர் முத்துராமலிங்கம் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் நடைபெறும்.

கொருக்குப்பேட்டை:

3—3—57 பிற்பகல் 3-30 மணியளவில், சென்னை—கொருக்குப்பேட்டை, துளசிங்க கிராமணி தெரு, தி. மு. கழக அலுவலகத்திலிருந்து தேர்தல் ஊர்வலம் தோழர் நலங்கிள்ளி தலைமையில் புறப்பட்டு வட்டம் முழுமையும் சுற்றிவரும். தோழர் என். வி. நடராசன் கலந்துகொள்வார்.

புளியந்தோப்பு:

3—3—57 காலை 7 மணிக்கு சென்னை 18-வது வட்டம் புளியந்தோப்பு தி. மு. கழகப் பணிமனையிலிருந்து, பெரம்பூர் தனித்தொகுதி அபேட்சகர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களை ஆதரித்து ஊர்வலம் புறப்படும். தொகுதியைச் சேர்ந்த கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்களின் உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஊர்வலத்தில் தோழியர் சத்தியவாணி முத்து கலந்துகொள்வார்.

திருச்சி:

3—3—57 மாலை 3 மணிக்கு, திருச்சி மெயின்கார்ட் கேட்டிலிருந்து, தி. மு. கழக அபேட்சகர் எம். எஸ். மணி அவர்களை ஆதரித்து ஊர்வலம் ஒன்று தோழர் கண்ணதாசன் தலைமையில் புறப்பட்டு, உறையூர் புத்தூர், தென்னூர், ஜெயில் தெரு, பாலக்கரை மணிக்கூண்டு, பெரியகடை வீதி வழியாக மதுரம் விளையாட்டு மைதானத்தில் முடிவுறும். மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டமும் உண்டு. கழகத் தோழர்கள், சார்புடைய மன்றங்கள், படிப்பகங்களிலுள்ள தோழர்களனைவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குடியாத்தம் தொகுதியில் தேர்தல் கூட்டங்கள்

மார்ச் 3: மாலை 6 மணி: கோபாலபுரம்; இரவு 8 மணி: அசனல் பேட்டை; மார்ச் 4: மாலை 6 மணி: பிச்சனூர்; மார்ச் 5: மாலை 6 மணி: கொசவன்புதூர்; மார்ச் 6: மாலை 6 மணி: காமாட்சியம்மன்பேட்டை.

[இக்கூட்டங்களில் தோழர்கள் ஏ. எஸ். இமயவரம்பன், மணிமொழியன், அமிர்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.]

எம். ஜி. ராமச்சந்திரன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைதியாகக் காத்திருந்து கூட்டத்தைச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கதாகும். தோழர் பி. சின்னத்தம்பி தலைமை வகித்தார். தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், அ. பொன்னம்பலனார், மற்றும் பலர் தி. மு. கழக வளர்ச்சி குறித்தும் தேர்தலில் மக்கள் கடமை குறித்தும் நாட்டில் நல்லதோர் எதிர்க்கட்சியாக அமைந்து ஜனநாயகம் மிளிரப் பாடுபட விரும்பும் கழகத்திற்கு ஆதரவு தருமாறும் கேட்டுக்கொண்டு சொற்பொழிவாற்றினர்.

[சுற்றுப்பிரயாணத்தின் மற்ற நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் தொடர்ந்து வெளிவரும்.]

மறைவு

சென்னை மாவட்ட தி. மு. க. முன்னாள் செயலாளரும், பொதுக்குழு உறுப்பினருமான தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களது 4 வயதுப் பெண் மகவு வைரமணி 1—3—57 அன்று மாலை திடீரென இயற்கையெய்தியமை குறித்து வருந்துகிறோம். மகவை இழந்துவாடும் அவருக்கும் அவரது உற்றார் உறவினர் அனைவருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக. (ஆ—ர்.)

தேர்தல் கூட்டங்கள்

சென்னை-கோடம்பாக்கம்

3—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை-கோடம்பாக்கம் ஈரோடு இரயில்வே கேட் அருகிலுள்ள ஜண்டாதோட்டத்தில், சென்னை சூளைமேடு, திருவேங்கடபுரம், குமாரபுரம் வாசிகள் சார்பில் தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்துத் தோழர் கே. பி. மாதவன் தலைமையில் தேர்தல் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. எஸ். ஜேசுபாதம், பி. ஆர். கோகுலகிருட்டிணன், செ. மு. காதர், பாபு ஆகியோர் பேசுவர்.

சென்னை—வண்ணை:

2—3—57 மாலை 6 மணிக்கு சென்னை—வண்ணை சிமிட்டிரி ரோடு மாடல்நகர் மைதானத்தில் தி. மு. கழக அபேட்சகர் என். ஜீவரத்தினம் அவர்களை ஆதரித்து தேர்தல் கூட்டம் தோழர் சேகன்னுதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் தஞ்சை-சுப்பையா, வி. ஜி. இராமசாமி, இராமச்சந்திரன், அன்புரோசு, சத்தியநாதன், த. கோவிந்தசாமி, பி. வி. முத்துசாமி ஆகியோர் பேசுவர்.

* * *

3—3—57 மாலை 6 மணிக்கு சென்னை—வண்ணை சோலையப்பன் தெருவில், அண்ணா படிப்பகத்தின் சார்பில் தி. மு. கழக அபேட்சகர் தோழர் என். சிவரத்தினம் அவர்களை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் ஆர். பாண்டியன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். சிவரத்தினம், வி. எஸ். கோவிந்தராசன், வே. கபிலன், ஏ. எஸ். வேலு, என். வி. மதிவண்ணன், ந. சேதுராமன், சி. ஆடலரசன் ஆகியோர் பேசுவர். தோழர் இராதாமாணிக்கம் இயக்கப்பாடல்கள் பாடுவார்.

சென்னை—இராயபுரம்:

3—3—57 மாலை 6 மணிக்கு சென்னை—மீனாட்சியம்மன் பேட்டையில், இராயபுரம் முஸ்லீம்கள் சார்பில் கழக அபேட்சகர் என். சிவரத்தினம் அவர்களை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் முகமதலி தலைமையில் நடைபெறும். தோழர்கள் ப. உ. சண்முகம், தஞ்சை-சுப்பையா, நி. ந. மதிவாணன், சத்தியநாதன், எஸ். ஆரோக்கியதாஸ் ஆகியோர் பேசுவர்.

சென்னை—சூளை:

3—3—57 மாலை 6 மணிக்கு சென்னை—சூளை தபால் நிலையம் அருகிலுள்ள சாமி பிள்ளைத் தெருவில் 26-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் கழக அபேட்சகர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் தோழர் வி. நிர்மலகிரி தலைமையில் நடைபெறும். நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, தோழர்கள் க. அன்பழகன், அறிவுடைநம்பி, பி. எம். கருணாகரன் (தெலுங்கில்), அ. நம்புசாமி, நல்லதம்பி ஆகியோர் பேசுவர்.

சிந்தாதிரிப்பேட்டை:

3—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை - சிந்தாதிரிப்பேட்டை சாமி பண்டாரத் தெருவில், தி. மு. கழக அபேட்சகர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், க. அறிவழகன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 38-வதுவட்டம்

3-3-57 இரவு 7-30 மணிக்கு சென்னை-ஆயிரம்விளக்கு பக்கிரி சாயபு வீதி 3-வது சந்தில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் ந. சுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. அசைத்தம்பி, சே. மு. காதர், கா. வீரபாண்டியன் ஆகியோர் பேசுவர்.

பெரியமெட் - சூளை:

3—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை - பெரியமெட் - சூளை சாமிப் பிள்ளைத் தெரு வி. கே. பிள்ளைத் தெரு சந்திப்பில் தி. மு. கழக அபேட்சகர்கள் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் நடைபெறும், தோழர்கள் க. அன்பழகன், க. அறிவழகன், பி. எம். கருணாகரன் (தெலுங்கில்) ஆகியோர் பேசுவர்.

அமைந்தகரை:

4—3—57 மாலை 6½ மணிக்கு சென்னை—ஆயிரம் விளக்குத் தொகுதி தி. மு. கழகத் தேர்தல் குழு சார்பில் அமைந்தகரையில் தோழர் என். எஸ். தேவராசன் தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். அன்று, தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. எஸ். ஜேசுபாதம், ஏ. கே. சாமி, தோழியர் அருள்மொழி, சற்குணம் ஆகியோர் பேசுவர்.

சென்னை-5வது வட்டம்:

3—3—57 இரவு 7 மணிக்கு சென்னை—5-வது வட்டம் பெருமாள்கோயில் தோட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக் கூட்டம் தோழர் ஏ. பி. துளசிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், என். சிவரத்தினம், வி. முனுசாமி எம்.சி., தோழியர் சத்தியவாணி முத்து ஆகியோர் பேசுவர்.

கோமளீசுவரன்பேட்டை

3—3—57 இரவு 7 மணியளவில் சென்னை - கோமளீசுவரன் பேட்டை காஞ்சி பச்சையப்பன் தெருவில், தி. மு. கழக அபேட்சகர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், கோகுலகிருஷ்ணன், பத்மன் செல்லப்பன், க. அறிவழகன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 7-வது வட்டம்:

3—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை - 7வது வட்டம் சாட்பாடா லேபர் லேன் தெருவில், தி. மு. கழகத் தேர்தல் பொதுக் கூட்டம் தோழர் நே. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், சினிமா நடிகர் வளையாபதி முத்துகிருஷ்ணன், பெ.த. இன்மொழியன், பி. எம். கருணாகரன் (தெலுங்கில்) ஆகியோர் பேசுவர்.

தேனாம்பேட்டை:

3—3—57 மாலை 6 மணிக்கு, சென்னை-37வது வட்டம் தேனாம் பேட்டை தாமோதரன் வீதி, திருவீதியம்மன் கோவில் மைதானத்தில், தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் டி. என். ஜான் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கோ. இளவரசு, கோ. சு. மணியம், அன்பின் எதிரொலி ஆகியோர் பேசுவர்.

வன்னிய தேனாம்பேட்டை:

3—3—57 மாலை 6½ மணிக்கு சென்னை—வன்னிய தேனாம் பேட்டை பொய்ஸ் சாலையில், தி. மு. கழகத் தேர்தல் பொதுக் கூட்டம் தோழர் இரா. அகமுகன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அறிவழகன், கை. பிரமையா, மா. செங்குட்டுவன் ஆகியோர் பேசுவர்.

காரைக்கால்:

3—3—57 காலை 9 மணிக்கு, காரைக்கால் ஜோதி டாக்கீசில் தி. மு. கழகத் தேர்தல் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் நாஞ்சில் - கி. மனோகரன், சி. ஜம்பு ஆகியோர் பேசுவர். கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

ஆரணி

3—3—57 மாலை 6-30 மணியளவில், ஆரணி தெலுங்குச்சேரி

மதுரையில்:

தேர்தல் ஊர்வலம்—பொதுக்கூட்டம்

3—3—57 மாலை 4-30 மணியளவில், தோழர் எஸ். முத்து அவர்களை ஆதரித்து தெற்கு வாசல் பிள்ளையார்பாளையம் வீதிக்கு அருகிலிருந்து தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் தலைமையில் புறப்பட்டு நான்கு வெளிவீதிகளையும் நான்கு மாசி வீதிகளையும் சுற்றி, வடக்குமாசி வீதி மறுமலர்ச்சி கழகத்தை வந்தடையும். மாலை 6-30 மணியளவில் அங்கு நடைபெறும் தேர்தல் கிளை அலுவலகத் திறப்பு விழாவில் தோழர்கள் எஸ். முத்து, எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோர் பேசுவர்.

தியாகராய நகர் தொகுதி தோழர்கட்கு:

3—3—57 காலை சென்னை 35-வது வட்டத் தி. மு. கழகப் பணிமனையிலிருந்து நகரில் ஒலிபெருக்கி, விளம்பரங்களுடன் கழக அபேட்சகர்களை ஆதரித்து சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு தொகுதி முழுமையிலும் நடைபெறும். 36, 47, 48, 49-வது வட்டத் தி. மு. கழகங்கள் சார்பு மன்றங்கள், படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்களனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. டி. பன்னீர்செல்வம் நினைவு நாள்

3—3—57 மாலை 5½ மணிக்கு சென்னை—கீழ்ப்பாக்கம் டெய்லர்ஸ் ரோடு அருகிலுள்ள திடலில், அம்பேத்கார் நினைவு மன்றச் சார்பில் 'பன்னீர்செல்வம் நினைவு நாள்' தோழர் மொ. ஞானகிராமன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கிள்ளிவளவன் ஆகியோர் பேசுவர்.

மோ. சி. சிதம்பரனார், நடிகமாணிக்கம் சுற்றுப்பயண விவரம்

மார்ச் 3: இடையர்பாளையம்; 4: மாச்சம்பாளையம்; 5: போத்தனூர்; மார்ச் 9 வரை தோழர் இராசமாணிக்கம் தொகுதி.

சென்னை - 46-வது வட்ட தி. மு. கழக ஊழியர் கூட்டம்

2—3—57 இரவு 9 மணியளவில் சென்னை - 46-வது வட்ட திருவள்ளுவர் சாலையிலுள்ள தி. மு. கழகத் தேர்தல் அலுவலகத்தில் ஊழியர் கூட்டம் நடைபெறும். கழகத் தோழர்களனைவரும் தவறாது வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆலமரத்தடி அருகில், பொன்னேரி தொகுதி தி. மு. கழக அபேட்சகர்கள் டி. சண்முகம், ஓ. செங்கம் ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் கா. நெடுமாறன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோ. வெற்றிவீரன், சா. சுப்பிரமணி, டி. முத்து, இராமதாசன் ஆகியோர் பேசுவர்.

* * *

3—3—57 இரவு 9 மணியளவில் ஆரணி அண்ணா நாடக மன்றத்தருகில், பொன்னேரி தொகுதி தி. மு. கழக அபேட்சகர்களை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தோழர் டி. முத்து தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோ. வெற்றிவீரன், சா. சுப்பிரமணி, கா. நெடுமாறன், இராமதாசன் ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.